# தேவ மக்கள் ஒரே சரீரமாக இணைந்து பணியாற்றுகின்றனர்

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, ஒரு மனித சரீரத்தின் பல உறுப்புகளைப் போல ஒவ்வொருவரும் தங்களால் செய்ய முடிந்ததை செய்து ஒருவருக்கொருவர் சேவை செய்யுமாறு சிறுவர்களுக்கு இந்தப் பாடத்தின் மூலம் உதவுவீராக."

இருக்கும் நேரத்துக்கும், குழந்தைகளின் வயதுக்கும் பொருத்தமான கல்வி நடவடிக்கைகளைத் தேர்ந்து கொள்ளவும்.

ஒரு **சித்திரப் புதிரை** சேர்ந்து செய்யலாம்.



- ஒரு பெரிய காகிதத்தில் சிறுவன் ஒருவனின் உடலை கோட்டுச் சித்திரமாக வரையவும் (எவ்வளவு தூரத்திற்குப் பெரிதாக இருக்கிறதோ அவ்வளவு தூரத்திற்கு சிறந்தது). பிள்ளைகளிடம் அதைக் காட்டவும்.
- அதைத் துண்டு துண்டாக ஒட்டி ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்த பட்சம் ஒரு துண்டாவது கிடைக்கும்படி விநியோகியுங்கள். பிள்ளைகள் துண்டுகளைச் சேர்த்து புதிரை விடுவிக்கட்டும். பெரிய பிள்ளைகள் சிறியவர்களுக்கு உதவுவார்களாக.
- குழு சிறியதாக இருந்தால் வெட்டிய துண்டுகளை ஆங்காங்கே ஒளித்து வைக்கலாம். குழந்தைகள் தேடி கண்டு பிடிக்கட்டும்.
- குழு பெரிதாக இருந்தால், பல படங்களைத் துண்டு துண்டாக வெட்டி தனித்தனி தொகுதிகளாக முன்னரே வைத்துக் கொள்ளுங்கள். பிள்ளைகளைப் பல குழுக்களாகப் பிரியச் சொல்லி, ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு படத்தைக் கொடுக்கவும்.
- துண்டு காகிதங்களைப் படமாக சேர்க்கும் போது தேவன் அவர்கள் செய்ய வேண்டும் என்று விரும்புவதை ஒவ்வொரு குழந்தையாகக் கூறட்டும். உதாரணமாக, பெற்றோருக்குக் கீழ்ப்படி, தேவனை நம்பு, தேவனிடம் அன்பு கூரு, மக்களை நேசி, எதிரியை மன்னிப்பாயாக, ஒருவருக்கு ஒருவர் சேவை செய், கொடு, மக்களுக்கு இயேசுவைப் பற்றி கூறு, துதி, ஜெபி, வேதாகமத்தைப் படி என்பது போல.
- சிறிய பிள்ளைகள் தாங்கள் என்ன செய்ய தேவன் விரும்புகிறார் என்பது குறித்து சிந்திக்க பெரிய பிள்ளைகள் உதவுவார்களாக.

**பெரிய பிள்ளை அல்லது ஆசிரியர்:** 1 கொரி, 12:4-26 ல் கொடுக்கப்பட்டுள்ள சரீரம் பற்றிய உதாரணத்தை விளக்குக.

- நாம் நமது சபையை 'சரீரம்' என்று அழைக்கிறோம். ஏனெனில் நாம் யாவருமே இயேசு கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள், அவரே நமது தலை. நாம் அவரது சரீரம்.
- ஒருவருக்கொருவர் சேவை செய்வதற்காக தேவன் தமது சபையில் உள்ள மக்களுக்கு விசேஷமான பணிகளைக் கொடுக்கிறார்.
- விசேஷமான வேலைகளைக் கொண்ட இந்த மக்கள் ஒன்றாக செயல்படும் நமது சரீரத்தின் அவயங்களைப் போன்றவர்கள்.

சரீரமாக நாம் எப்படி செயலாற்றுகிறோம் என்பதைப் பற்றி **கேள்விகள் கேட்கவும்.** (ஒவ்வொரு கேள்விக்குப் பின்னும் பதில் உண்டு).

- சபையில் மக்கள் ஆற்றக் கூடிய சில பணிகள் என்ன? (8-10).
- ஒவ்வொருவருக்கும் ஆவிக்குரிய வரங்களை யார் அளிப்பது? (11)

- கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகளைப் பரிசுத்த ஆவியானவர் எதற்குள் ஞானஸ்நானம் பெறச் செய்கிறார்? (12-14).
- சரீரம் முழுவதுமே கண்ணாக இருந்தால் எது குறைவாக இருக்கும்? (17)
- சரீரத்துக்குள் இருக்கும் ஒரு மனிதன் பாடுபட்டாலோ மகிமைப்பட்டாலோ நாம் என்ன செய்வோம்? (வச. 26)

ஒருவரோடு ஒருவர் இசைந்து வேலை செய்யாவிட்டால் சரீரம் எவ்வாறு செயல்படும் என்பதை சிறுவர்கள் செய்து காட்டவும்.

- பிற இடங்களுக்கு தேவனைப் பற்றிய நற்செய்தியை எடுத்துச் செல்கிறவர்களை கால்கள் என விளக்கவும். பின்னர் கூறவும், "நமது கால்களில் ஒன்று தனது வேலையைச் செய்யாவிட்டால் சரீரம் எவ்வாறு நடக்கும் என்பதை எடுத்துக்காட்டுக" (சிறுவர்கள் நொண்டி தாண்டுதல்).
- கண்களுக்கும் இதுபோல் செய்க.

1 கொரி. 12 ன் ஒரு பகுதியை நாடகப்படுத்துக.

- சபைத்தலைவரோடு பேசி முக்கிய ஆராதனை வேளையில் பெரியவர்களுக்கு சிறியவர்கள் நாடகத்தை நடத்திக் காட்டவும். சில பகுதிகளையே நாடகப்படுத்தலாம். பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு ஆயத்தம் செய்வதில் உதவி செய்யவும்.
- தேவகுரலாக **ஒரு பெரிய பிள்ளை நடிக்கட்டும்.** ஆசிரியராக **ஒரு பெரிய பிள்ளை அல்லது ஆசிரியர் நடிக்கட்டும்.**
- மற்ற **சிறுவர்கள் கால்கள், கைகள், கண்கள், காதுகளாக நடிக்கட்டும்.**

**ஆசிரியர் :** 4-13 வசனங்களை விளக்குக. பின் கூற வேண்டியவை, "தேவ ஆவியானவர் கூறுவதைக் கேளுங்கள்."

**தேவ குரல்:** "வாருங்கள். சரீரத்தின் பகுதியாக இருங்கள். ஞானஸ்நானம் அளிக்கும் போது நான் உங்களை இயேசுவின் சரீரத்துக்குள் கொண்டு வந்து ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பணிகளைச் செய்யும்படியாகத் தருகிறேன். இந்தப் பணிகளைச் செய்யும் திறமைகளையும் தருகிறேன். இந்த ஆவிக்குரிய வரங்களை ஒருவருக்கொருவர் சேவை செய்யும்படியாகப் பயன்படுத்துங்கள்."

**கால்கள், கைகள், கண்கள், காதுகள்:** கைகளைக் கோர்த்து வட்டமாக நிற்கவும். ஒரு தடவை அப்படியே சுழன்று வரவும். குழு பெரிதாக இருந்தால், பெரிய வட்டத்துக்குள் சிறிய வட்டங்களாக அமைக்கவும்.

**ஆசிரியர் :** வசனங்கள் 14-21 ஐ விளக்குக. பின் கூற வேண்டியது, "இரண்டு சோம்பேறிக் கால்கள் கூறுவதைக் கேளுங்கள்."

**கால்கள்:** வட்டத்தை விட்டு வெளியே வருதல். சத்தம் போட்டு, "கால்களாகிய எங்களை யாரும் கவனிப்பதில்லை. நாங்கள் இந்தக் குழுவை விட்டு வெளியேறி விடுவோம்!" "நான் கைகளாக இல்லாவிட்டால் சேவை செய்ய மாட்டேன். நான் கைகளாக இருக்க விரும்புகிறேன்" (வட்டத்தில் இருப்பவர்கள் கீழே விழுதல்).

**காதுகள் (கோபமாக):** "நான் வெறும் காதே!" "நான் கண்களாக இருந்திருக்க வேண்டும்." (வட்டத்தை விட்டுப் போதல்).

**கைகள் :** "நான் கை. எல்லாவற்றையும் விட முக்கியமானவன்!" "நீங்கள் யாரும் எனக்கு வேண்டாம்" (போய் விடுதல்)

**கண்கள் :** "நான் தான் கண், மூக்கே! நீ எனக்கு வேண்டாம்." "நீ இல்லாமலேயே என்னால் பார்க்க முடியும்!" (போதல்).

**ஆசிரியர் :** வசனங்கள் 22-26 ஐ விவரித்து கூறுவது, "பரிசுத்த ஆவியானவர் கூறுவதைக் கேளுங்கள்!"

**தேவ குரல்:** "வட்டத்துக்குள் எல்லோரும் வாருங்கள். உங்கள் ஒவ்வொருவரையும் தேவன் உபயோகிப்பார்!"

**கால்கள், கைகள், கண்கள், காதுகள்:** வட்டத்தை இணைத்து மீண்டும் ஒரு முறை சுற்றிவரச் செய்தல்.

**ஆசிரியர் அல்லது ஒரு பெரிய பிள்ளை:** நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுதல். பிள்ளைகள் பெரியவர்களுக்கு இந்த நாடகத்தை நடத்திக் காட்டினால், மேலே உள்ள கேள்விகளையும் பெரியவர்களிடம் கூறவும்.

**கலந்துரையாடல்:** நமது வெவ்வேறு ஆவிக்குரிய வரங்களை உபயோகித்து ஒருவருக்கு ஒருவர் சேவை செய்யும் வழிகளைப் பற்றி சிறுவர்களிடமும் பெரியவர்களிடமும் கேட்கலாம்.

**வரைக:** ஒரு கையின் எளிய படத்தை வரைக. பிள்ளைகள் அதைப் பார்த்து வரையட்டும். இந்தப் படத்தை அடுத்த ஆராதனை வேளையில் பெரியவர்களுக்குக் காட்டி, நமது சரீரத்தின் பல அவயவங்களைப் போல, நாமும் ஒருவருக்கொருவர் சேவை செய்ய தேவன் நமக்கு வெவ்வேறு திறமைகளைத் தருகிறார் என்று விளக்கவும்.



**மனப்பாடம்:** சிறிய பிள்ளைகள் கலா. 5:13, பெரிய பிள்ளைகள்: எபே. 4:15-16.

**சங்கீதம்:** சங்கீதம் 100 ன் வசனங்களை ஐந்து பிள்ளைகள் ஒப்புவிப்பார்களாக.

நாம் ஒரே சரீரமாக வேலை செய்வது பற்றி **பெரிய பிள்ளைகள்** கவிதை அல்லது பாடல் எழுதலாம். இதை அவர்கள் வார நாட்களில் செய்வார்களாக.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, எங்கள் குழுவில் உள்ள யாவருக்கும் செய்ய ஒரு வேலை தந்ததற்காய் நன்றி. ஒருவருக்கொருவர் சேவை செய்ய உதவி செய்யும். மற்றவர்களை விட நாங்கள் மேலானவர்கள் என்று நாங்கள் எண்ணுவதில் இருந்து எங்களை விடுவிக்கவும். ஒவ்வொரு விசுவாசியும் உமக்கு முக்கியமானவர்களே என்பதை நாங்கள் ஞாபகம் வைத்துக் கொள்ள உதவுவீராக!"

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net